Regd with the Registrar of Newspapers for India No. TN TAM/2007/22101
Regd. TN/CC(S)Dn/326/13-15 Date of Publication 25th of Every Month










Owned and Published by: S. Paulraj Kennedy from A-1, Deju Plaza, No. 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Phone: +91 - 44 - 22353500
Printed by: Jolly Peter at Sharp Offset Printers, New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Phone: +91 - 44 - 28480607
Editor: Nija Kennedy

# ஏக்காளம்

Vol. 6
Issue. 8

தனிப்பிரதி ரூ20/=
ஏப்ரல் 2013



# தியானம்



**- நிஜா கென்னடி**

**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும், அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்** *(சங்கீதம் 1:1,2).*

எளிய வேதாகமம் இப்படியாகக் கூறுகிறது: **தீய ஜனங்களின் அறிவுரையைக் கேளாமலும், பாவிகளைப்போன்று வாழாமலும், தேவனை மதிக்காத ஜனங்களோடு சேராமலும் இருக்கிற மனிதன் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருப்பான். ஒரு நல்ல மனிதன் கர்த்தருடைய போதனைகளை நேசிக்கிறான். அவற்றைக் குறித்து அவன் இரவும், பகலும் தியானிக்கிறான்.** துன்மார்க்கமாய் நடக்கிறவர்களுடைய போதனைகளை நாம் கேட்கக் கூடாது. அவர்களுடைய திட்டங்களின்படி செய்யக்கூடாது. அவர்களுடைய நோக்கங்களின்படி நடக்கக் கூடாது. மற்றவர்களுக்கு துன்பத்தை தரும் வழியில் நடப்பவர்களே துன்மார்க்கர். பாவமான வாழ்க்கையை வாழ்பவர்கள் பாவிகள். துன்மார்க்கர், கர்த்தருடைய வார்த்தையின்படி நடக்கமாட்டார்கள். இரக்கமற்றவர்களாக, நேர்மையற்றவர்களாக, வன்முறையில் ஈடுபடுபவர்களாக, சட்டத்தை மீறுகிறவர்களாக முறைகேடாக நடப்பார்கள். **துன்மார்க்கன் தன் கர்வத்தினால் தேவனைத் தேடான்; அவன் நினைவுகளெல்லாம் தேவன் இல்லையென்பதே** *(சங்கீதம் 10:4).*

துன்மார்க்கன் பெருமை நிறைந்தவன் *(சங்கீதம் 10:2,4).* சிறுமைப்பட்ட ஏழை ஜனங்களைத் துன்பப்படுத்துவான். பேராசைப்படுவான். தேவனுடைய போதனைகளை ஏற்றுக்கொள்ளாமல் அசட்டை செய்வான் *(சங்கீதம் 10:5).* தேவனுடைய நியாயத் தீர்ப்பு தன்மேல் வரும் என்கிற பயமில்லாமல் இருப்பான். பிறரைக் குறித்து எப்போதும் தீமையே பேசுவான். பிறரை வஞ்சிக்கிறான்; ஏமாற்றுகிறான். திக்கற்றவர்களுக்கு அநியாயம் செய்கிறான். **அவன் வாய் சபிப்பினாலும், கபடத்தினாலும், கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமும் உண்டு** *(சங்கீதம் 10:7).* துன்மார்க்கன் தேவ பயமில்லாமல், ஏழைகளை ஒடுக்கி அவர்களுக்குரிய சுதந்திரத்தையும், உரிமையையும் வழங்காமல் அவர்களைத் தொல்லைப்படுத்துவான். **துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா



ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்** *(சங்கீதம் 9:17).*

நாம் சமாதானமில்லாத வழியிலே செல்லுவோமானால் நமக்கு துன்பம்தான் ஏற்படும். யாருடைய ஆலோசனையைக் கேட்கிறோமோ, அவர்களைப்போலத்தான், அவர்கள் சொல்லுகிற வழியும் இருக்கும். மற்றவர்களை ஏளனம் செய்பவர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. நம்மை தேவனைவிட்டு விலகச் செய்யும் மனிதர்களை விட்டு விலகுவோம். நாம் யாருடன் சேர்கிறோமோ அவர்களது குணங்கள் நம்மையறியாது நமக்குள் வந்துவிடுகிறது. மற்றவர்களை ஏளனமாகப் பேசி, அவர்களை பரியாசம் பண்ணுகிறவர்களிடம் நாம் உட்கார்ந்து பேசுவதை நிறுத்த வேண்டும். தொடர்ந்து அந்த மனிதர்களோடு உறவு வைத்துக்கொண்டிருந்தால், தேவனுடைய வார்த்தையின்படி நடக்காமல், அவருடைய சித்தத்திற்கு எதிராகச் செயல்படுவோம். தேவனை அசட்டை பண்ணுகிறவர்களாகி விடுகிறோம். தேவனை மதித்து, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, சந்தோஷமும் சமாதானமும் உள்ளவர்களாக இருப்போம்.

அகங்காரமும் இடும்புமுள்ளவனுக்குப் பரியாசக்காரனென்று பெயர், அவன் அகந்தையான சினத்தோடே நடக்கிறான் *(நீதிமொழிகள் 21:24).* மற்றவர்களைவிடத் தாங்கள் மேலானவர்கள் என்ற எண்ணமுடைய, பெருமை குணமுடையவர்களே பரியாசக்காரர். மற்றவர்களை இவர்கள் அடக்கியாள்வார்கள்.

**ஈசாக்கு, சாயங்கால வேளையிலே தியானம்பண்ண வெளியிலே போயிருந்து** *(ஆதியாகமம் 24:63).* கர்த்தரைக் குறித்த சிந்தனையில் இருப்பதே தியானம். நாம் வேதத்தை படிக்க குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்க வேண்டும். படித்தபின், வார்த்தைகளைப் பற்றிய கருத்துக்களை சிந்தனையில் கொண்டுவந்து, ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாமாகவே ஒன்றை புரிந்துகொள்ளாமல், ஆண்டவர் என்ன சொல்லி யிருக்கிறார் என்பதை தெரிந்துகொள்வதே தியானிப்பதாகும். வேதத்தை தியானிப்பதற்கு முன்பு நம்மை தாழ்த்த வேண்டும். புதிய வெளிப்பாடுகளையும், வேதத்தின் ஆழங்களையும் கர்த்தர் நமக்கு கொடுக்கும்படியாக ஜெபிக்க வேண்டும். வேதத்தை படிக்க படிக்க தேவனுக்கும் நமக்குமிடையே உள்ள உறவு நெருக்கமாகும்.

**உமது கட்டளைகளைத் தியானித்து, உமது வழிகளைக் கண்ணோக்குகிறேன்** *(சங்கீதம் 119:15).* கர்த்தருடைய கட்டளைகளை தியானிப்பதினால், அந்த வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதின்படி நடப்பதினால், நாம் அழிவின் பாதையில் செல்லாமல் தேவனுடைய வழியில் நடக்கிறோம்.

கர்த்தருடைய வேதத்தை படித்தறிந்துகொள்வதில் நேரத்தை செலவிட வேண்டும். வேத வார்த்தைகளை கற்றுணர்ந்து, ஆராய்ந்து அறிந்துகொள்வதன்மூலம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் வரும் பிரச்சனைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்ளலாம். வேதத்தை கவனமாக படிப்பதன்மூலம் தேவ ஞானம் நமக்குள் வரும். தேவ ஞானம் நல்லதொரு வாழ்க்கையை வாழ நம்மை வழி நடத்தும். வேதம், மனுஷனை நம்பி வாழாமல் தேவனை நம்பி வாழும்படி போதிக்கிறது *(எரேமியா 17:5-8).* வேதத்தின்மூலம், கர்த்தருடைய சிந்தையையும், தேவனுக்கு பிரியமானது எது என்றும், தேவனுக்கு பிரியமில்லாத காரியங்கள் எவை என்றும் அறிந்துகொள்ளலாம்.

தேவனை நேசித்து, அவரோடு ஐக்கியமாய் வாழ விரும்புகிறவர்கள்,

வேதத்தைத் தியானிப்பார்கள். வேதத்தைத் தியானிப்பதின்மூலம் கர்த்தர் என்ன சொல்லுகிறார், அவரது வாஞ்சை விருப்பங்கள், ஏக்கங்கள் என்ன என்பதை அறிந்துகொள்ளலாம். நாம் வாழ்கிற வாழ்க்கை தேவன் விரும்புகிறபடி இருக்கிறதா? அப்படி நாம் வாழவில்லையென்றால், வார்த்தையின்படி வாழ நம்மை அர்ப்பணிக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் தேவனைப் பின்பற்றி வாழ முயற்சி செய்ய வேண்டும்.

கர்த்தருடைய வார்த்தை, துன்பத்தோடிருக்கிறவர்களை ஆற்றித் தேற்றுகிற தாய், கவலையை நீக்கி மன அமைதியை அளிகிறதாய் இருக்கிறது. **கர்த்தருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு** *(சங்கீதம் 119:165)*. கர்த்தருடைய வார்த்தை, பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறது. தேவனைப் பற்றிய உண்மைகளையும், நீதியையும் கற்றுக் கொடுக்கிறது *(ரோமர் 10:5-6)*. பாவத்தை சுட்டிக் காட்டி, பாவத்திலிருந்து விடுதலையை (இரட்சிப்பை) பெற்றுக்கொள்ளும்படி வழிநடத்துகிறது. **வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது** *(2 தீமோத்தேயு 3:16, 17)*. வார்த்தையின்படி நடக்கும்போது நமக்கு வரும் ஆசீர்வாதங்களை அறிந்துகொள்ளலாம். வார்த்தையின்படி நடக்காதபோது வரும் சாபங்களை அறிந்து கொண்டு நம்மை சரிசெய்து கொள்ளலாம். மேலும், தவறு செய்கிறவர்களுக்கு வழிகாட்டி, தவறுகளை திருத்தி, நல்ல வழியில் வாழ வழிகாட்டும்.

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்** *(சங்கீதம் 119:1)*. யாரெல்லாம் கர்த்தருடைய சித்தத்திற்கு தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, கீழ்ப்படிகிறார்களோ அவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்கள் சுகத்தோடு, ஆரோக்கியத்தோடு, கனிகொடுக்கும் மரத்தைப்போல இருப்பார்கள். கர்த்தர் அவர்களுக்குப் பாதுகாப்பாயிருப்பார். யாரெல்லாம் தேவனை நம்பாமல், அவருக்குக் கீழ்ப்படியாமல், தேவனில்லாததொரு வாழ்க்கையை வாழ்கிறார்களோ அவர்கள், காற்றடிக்கும்போது பறக்கும் தூசியைப்போல மறைந்து போவார்கள்.

நமக்கு முன்பாக இரண்டு வழிகள் இருக்கிறது. ஒன்று, கர்த்தருடைய வழி. மற்றொன்று, துன்மார்க்கமான வழி. நாம் எந்த வழியில் வேண்டுமானாலும் செல்லலாம். தேவன் நம்மை அவருடைய வழியில் செல்ல வற்புறுத்த மாட்டார். நாமாகவே அவருடைய வழியை தெரிந்துகொள்கிறோமா என்றுதான் பார்க்கிறார். தேவனுக்கு கீழ்ப்படியும்போது, அவருடைய வழியில் செல்லலாம். தேவனுக்கு எதிர்த்து நின்று வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் அழிவின் பாதையிலும் செல்லலாம். நாம் தேவனுடைய வழியில் செல்ல உறுதியாயிருக்க வேண்டும். நாம் எந்த வழியை தெரிந்துகொள்கிறோம் என்பதை வைத்தே நாம் பரலோகத்துக்கு போவோமா அல்லது நரகத்துக்கு போவோமா என்பதை தெரிந்து கொள்ளலாம்.

**தாவீது**

**என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது; அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்** *(சங்கீதம் 39:3)*. தாவீது, கர்த்தரைக்குறித்து தியானிக்கிறவனாக இருந்தான். கர்த்தரைப்பற்றி சிந்தித்துக்கொண்டு, அவரைக்குறித்த எண்ணங்களை அசைபோட்டுக் கொண்டிருந்தான். தேவன் மீதுள்ள அன்பினால் நிறைந்து, தியானித்தான். தன் வாழ்க்கையில் ஏற்பட்ட அநீதியான செயல்களையும், துன்பங்களையும் நினைத்து, உணர்ச்சிவசப்பட்டு கோபமடைந்தான். அதனால் அவன் கர்த்தரை நோக்கிப் பார்த்து, அவரைக் குறித்து சிந்தித்து, அவரிடம் பேசிக் கொண்டிருந்தான். தன்னைச் சுற்றியிருந்த சூழ்நிலையை மறந்து, கர்த்தரைக்குறித்த சிந்தனையிலே மூழ்கியிருந்தான்.

**என் படுக்கையின்மேல் நான் உம்மை நினைக்கும்போது, இராச்சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்** *(சங்கீதம் 63:6)*. தாவீது, இரவு முழுவதும் தேவனை நினைத்து, தியானித்துக் கொண்டிருக்கிறான். அவன் சிறுவயதிலிருந்தே கர்த்தரைத் தேடினான். அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது, அவரைப் பாடி, ஆராதித்துக் கொண்டிருந்தான்.




**எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச் செய்யும்; சத்துருவினுடைய கூக்குரலினிமித்தமும், துன்மார்க்கன் செய்யும் இடுக்கத்தினிமித்தமும் என் தியானத்தில் முறையிடுகிறேன்** *(சங்கீதம் 55:2)*. தாவீது, தேவனோடு ஐக்கியமாய் இருந்ததால் கர்த்தரை நோக்கி முறையிட்டு, தன் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும்படி கேட்கிறான்.

**கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தை கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்** *(சங்கீதம் 5:3)*. **அந்தி சந்தி மத்தியான வேளைகளையிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்** *(சங்கீதம் 55:17)*. தாவீது ஒவ்வொரு நாளும் கர்த்தருக்கு முதலிடம் கொடுத்து அவரைப்பற்றி தியானிக்கிறவனாய், ஜெபிக்கிறவனாய், கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவனாய் இருந்தான். கர்த்தர் தன்னோடு (தன் இருதயத்தில்) பேசுவதற்காக அவருடைய சமூகத்தில் காத்திருந்தான். கர்த்தருடைய ஆலோசனையைப் பெற்றுக்கொண்டு அதன்படி நடந்தான். கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, காலை, மாலை, நடுப் பகல் வேளைகளில் கர்த்தரோடு பேசிக் கொண்டு, அவரோடுகூட உள்ள உறவில் தொடர்ந்து நிலைத்திருந்தான்.

**தானியேல்**

தானியேல் ஒவ்வொரு நாளும் தேவனிடம் மூன்றுமுறை ஜெபித்தான். இடைவிடாமல் தேவனை ஆராதிக்கிறவனாக இருந்தான். **தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்** *(தானியேல் 6:10)*. தேவ சமூகத்தில் காத்திருந்து ஜெபித்து, தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் பெற்றுக் கொண்டான்.



தேவனோடுகூட ஐக்கியமாயிருந்து, அவருக்கு பிரியமாய் வாழ்ந்தான். தானியேல் தியானப் புருஷனாய் இருந்தான். தேவ ஞானத்தையும், விசேஷித்த ஆவியையும் பெற்றிருந்தான். மற்ற ஜனங்களுக்காக ஜெபிக்கிறவனாக இருந்தான். அவன் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து, தேவனுடைய ஆலோசனையையும், தேவனுடைய வழிநடத்துதலையும் பெற்றுக் கொண்டான்.

தேவன் அவனை சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார். **மற்றவர்களைக் காட்டிலும் பத்து மடங்கு சமர்த்தராகக் காணப்பட்டான்** *(தானியேல் 1:17, 20)*. அந்நிய தேசத்தில் இருந்தபோதும் தேவனைப் பின்பற்றி வாழ்ந்தான். தேவன் அவனை அத் தேசத்தின் ராஜாவிற்கு ஆலோசனைக்காரனாக உயர்த்தி னார்.

**பேதுரு**

**அப்போஸ்தலனாகிய பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல் வீட்டில் ஏறினான்** *(அப்போஸ்தலர் 10:9)*. பேதுரு மத்தியான வேளையிலே பன்னிரெண்டு மணிக்கு ஜெபம்பண்ணச் சென்றான். அவன் மிகுந்த பசியோடிருந்தான். மற்றவர்கள் உணவை தயாரித்துக் கொண்டிருந்தார்கள். பேதுரு ஜெபிக்கும்போது தரிசனம் பார்க்கிறான். பசியோடிருக்கும் நேரத்திலும் கர்த்தரோடு உறவாட தனித்துச் சென்றான்.

**எரேமியா**

எரேமியா தீர்க்கதரிசி கர்த்தருடைய வார்த்தையைக்குறித்து தியானித்துக் கொண்டிருந்தபோது, இப்படியாகக் கூறுகிறான்: **அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக்கூடாமற் போயிற்று** *(எரேமியா 20:9)*. கர்த்தருடைய வேதத்தை தியானிக்கிறவர்களுக்கு கர்த்தர் தமது வார்த்தையைக் கொடுப்பார். அதைச் சொல்ல வேண்டியவர்களுக்கு போய் சொல்ல வேண்டும். **என் வார்த்தை அக்கினியைப்போலவும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப்போலும் இருக்கிறதல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்** *(எரேமியா 23:29)*.

**நான் அவரை தியானிக்கும் தியானம் இனிதாயிருக்கும்; நான் கர்த்தருக்குள் மகிழுவேன்** *(சங்கீதம் 104:34)*. கர்த்தருடைய வார்த்தையை கருத்தாய் தியானிக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் புதிய விளக்கங்களைத் தருவார். **உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்; நாள்முழுவதும் அது என் தியானம்** *(சங்கீதம் 119:97)*.

**உமது வசனத்தைத் தியானிக்கும்படி, குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்** *(சங்கீதம் 119:148)*. தினமும் அதிகாலையிலே கர்த்தருடைய சமூகத்தில் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். அந்த நாள் முழுவதும் கர்த்தர் நம்மை நடத்தும்படியாகவும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கர்த்தரிடம் ஒப்புக் கொடுக்கவேண்டும். கர்த்தருடைய



சித்தத்திற்கு நேராக நடத்தும்படியாகவும், அவருடைய ஆலோசனைகளைத் தரும்படியாகவும் ஜெபிக்க வேண்டும். கர்த்தரோடு நெருங்கிய உறவு வைத்திருக்க வேண்டும். அதிகாலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவோம். தாவீதைப்போல, தானியேலைப்போல நாள் முழுவதும் தொடர்ந்து அவரோடு கூட உள்ள ஐக்கியத்தில் நிலைத்திருப்போம். கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து அவருக்கு முதலிடம் கொடுப்போம்.

தேவனோடு எப்பொழுதும் நேரத்தை செலவழிக்கும்போது, நம் வாழ்க்கையில் நிரந்தரமான மாற்றத்தைக் காணலாம். நாம் தேவனை நேசிக்காமல், உண்மையில்லாமல் அரைகுறை மனதுடன் தேவனை தேடுவோமானால், முழுமையான அர்ப்பணிப்பில்லாதவர்கள். தேவனை உண்மையாய் நேசித்து, அவருக்கு முதலிடம் கொடுப்பவர்கள், இருதயத்தின் ஆழத்திலிருந்து, முழு இருதயத்தோடும், முழு மனதோடும் தேவனைத் தேடுவார்கள்.

நாம் வேதத்தை தியானிப்பதை வழக்கமாகக் கொள்ளவேண்டும். வேத வார்த்தைகளை சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். அது நமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாயிருக்கும். **உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது** *(சங்கீதம் 119:105)*. தாவீதைப்போல அதிகாலை யில் கர்த்தரைத் தேடுவோம். கர்த்தர் நம்மோடுகூட பேச அவருடைய சமூகத்தில் காத்திருப்போம். கர்த்தருக்கு முதலிடம் கொடுப்போம்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே, பாவங்களிலிருந்து, சாபங்களிலிருந்து நம்மை மீட்டு எடுத்திருக்கிறார். அதை நினைத்து தினமும் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். வேதத்திலுள்ள வாக்குத்தத்தங்களுக்காக நன்றி சொல்லுவோம் *(சங்கீதம் 19:7-11)*. அவர் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளை நினைத்து சாட்சி சொல்வோம். கர்த்தரோடுகூட நேரத்தை செலவிடுவோம்.

கர்த்தரை உண்மையாய் நேசிக்கிறவர்கள், அவருடைய கற்பனைகளை தியானித்து, அவைகளை கைக்கொள்வார்கள். சகல பொல்லாத வழிகளையும் வெறுப்பார்கள். கர்த்தர் போதித்திருக்கிற நியாயங்களைவிட்டு விலகாமல் இருப்பார்கள். சத்தியத்தில் பிரியமாயும், மனமகிழ்ச்சியுமாயிருப்பார்கள். **உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்** *(சங்கீதம் 119:104)*. நான் உம்முடையவன், என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன் *(சங்கீதம் 119:94)*. கர்த்தருடைய வசனங்களை ஆராய்ந்து, அவற்றிற்குக் கீழ்ப்படிகிறவர்கள் மட்டுமே கர்த்தருடையவர்கள்.

**நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர்; அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது. உம்முடைய சாட்சிகள் என் தியானமாயிருகிறபடியால், எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால், முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்** *(சங்கீதம் 119:98-100)*. கர்த்தருடைய வார்த்தை நம்மை ஞானமுள்ளவர்களாக மாற்றுகிறது. தேவன் போதித்த வழியில், அவருடைய வழிநடத்துதலின்படி நடக்க நம்மை அனுமதிக்கும்போது ஞானம் நமக்குள் வரும். நமக்கு போதித்தவர்களுக்கும், முதியவர்களுக்கும் பல அனுபவங்கள் இருக்கும். அதை வைத்து பேசுவார்கள். நாம் கர்த்தருடைய

வார்த்தையை தியானிக்கும்போது, நம்மைப் பகைக்கிறவர்களைக் காட்டிலும், நமக்கு போதித்தவர் களைக் காட்டிலும், முதியவர்களைக் காட்டிலும் அதிக ஞானமுள்ளவர்களாய் மாற்றும்.

***வீண் சிந்தனைகளை வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்*** *(சங்கீதம் 119:113)*. கர்த்தரை நேசிக்காமல், அவருடைய வார்த்தையின்படி நடக்காதவர்கள், வீணான காரியங்களையே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். தங்களைச் சுற்றி நடக்கிற சம்பவங்களையும், மனிதர்களையும், சூழ்நிலையையும் பார்த்து பயந்து, சோர்ந்துபோய் எதிர்மறையான சிந்தனைகளில் மூழ்கிப் போவார்கள். கர்த்தரை நேசித்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சூழ்நிலைகள் மற்றும் நம்மை சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளையும், துன்மார்க்கமாய் வாழும் மனிதர்களையும், அவர்களின் நேர்மையற்ற தன்மையையும், தந்திரமான சூழ்ச்சிகளையும் நினைத்து, கலங்கி, சோர்ந்துபோகக் கூடாது. கர்த்தரால் என்ன செய்ய முடியும் என்றும், கர்த்தருடைய வார்த்தை இதைக் குறித்து என்ன சொல்லுகிறது என்பதைக் குறித்தும் சிந்திக்க வேண்டும். கர்த்தருடைய வார்த்தையை நம் சிந்தனையில் கொண்டுவந்து அதைக்குறித்தே பேசுவோம். எதிர்மறையான சிந்தனைகளை நம்மைவிட்டு அகற்றுவோம். அவர்களோடிருப்பவர்களைக்காட்டிலும் நம்மோடிருக்கும் தேவன் பெரியவர் என்பதை மறந்து போகாதிருப்போம்.

கர்த்தருடைய வார்த்தையை விசுவாசிப்போம். விசுவாசத்தோடுகூட வார்த்தையை அறிக்கை செய்வோம். எதிர்மறையான வார்த்தைகளை பேசாதிருப்போம். நம் இருதயத்தின் சிந்தனைகளே நம் வாயின் வார்த்தைகளாக வெளியே வருகிறது. கர்த்தருடைய வார்த்தையை தியானித்து, நம் இருதயத்தை கர்த்தருடைய வார்த்தைகளால் நிரப்புவோம். அதையே பேசுவோம். அதன்படியே நடப்போம்.

**தியானமும், வெற்றியும்**

**இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்** *(யோசுவா 1:8)*. நாம் செய்கிற காரியங்கள் எல்லாம் வாய்க்கவும், ஞானமாய், வெற்றியோடு, செழிப்போடு வாழ்வதற்கான இரகசியத்தை கர்த்தர் இங்கு யோசுவாவுக்கு கூறியுள்ளார். தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தையை தியானிக்கும்போதுதான் அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்க முடியும். அப்படி கீழ்ப்படிந்து நடந்தால், நாம் செய்கிற எல்லாவற்றிலும் தொடர்ந்து வெற்றி பெறுவோம்.

வேதத்தை படிக்காதவர்களும், படித்தும் அதன்படி நடக்காதவர்களும் இக்கட்டான வேளையில் சரியான முடிவுகளை எடுக்க முடியாமல், தங்களுடைய சிந்தனைகளை சீர்படுத்த முடியாமல், செய்வதறியாது தவிப்பார்கள். ஆனால் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழும்போது, கர்த்தருடைய வார்த்தையின்படி சரியான முடிவுகளை எடுப்போம். கர்த்தருடைய நேரான வழியில் செல்ல தீர்மானிப்போம்.

அநேகர் தங்களுடைய எதிர்காலத்தைக்குறித்து, செய்யப் போகும் தொழிலைக்குறித்து, சேமிப்பைக்குறித்து, பிள்ளைகளைக்குறித்து சிந்தித்து சுயமாக பல திட்டங்களைப் போடுவார்கள். நாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சித்தத்தை அறிந்து, அவருடைய ஆலோசனையின்படி



நடக்கும் போதுதான் நாம் செய்கிற காரியங்கள் வாய்க்கும்.

**இஸ்ரவேலின் ராஜாவாகிய ஆகாப், கர்த்தரின் கட்டளைகளைவிட்டு பாகால்களைப் பின்பற்றினான்** *(1 இராஜாக்கள் 18:18)*. அவன், சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல் அவன் பாகாலையும் தொழுதுகொண்டான். பாகாலுக்கென்று ஒரு கோயிலையும் கட்டினான். அவன் இஸ்ரவேல் ஜனங்களை கர்த்தரண்டை நடத்தாமல், விக்கிரகங்களை வழிபடச் செய்தான். கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியா இஸ்ரவேல் ஜனங்களிடம் **நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்தி குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால், அவரைப் பின்பற்றுங்கள் என்றான்** *(1 இராஜாக்கள் 18:21)*. எலியா, ஜனங்களிடம் உண்மையான தெய்வத்தைப் பின்பற்றும்படி சவால் விடுகிறான். யாரைப் பின்பற்றுவது என்பதில் ஜனங்கள் தடுமாறினார்கள். கர்த்தர்தான் தெய்வம் என்பதில் உறுதில்லாமல் இருந்தார்கள்.


அநேகருக்கு கர்த்தர்தான் ஜீவனுள்ள தேவன் என்று அறிந்திருந்தும் பாவம் செய்து, இன்பமாக பொழுதைப்போக்கிக் கொண்டு மகிழ்ந்துகொண்டிருப்பார்கள். நாம் கர்த்தருக்காக எழும்ப வேண்டும். அவரையே பின்பற்றுவேன் என்கிற உறுதியோடிருக்க வேண்டும்.

அநேகர் கர்த்தரை முழுமையாக பின்பற்றாமல் கடமைக்காக ஜெபிப்பார்கள், ஆலயத்திற்கு செல்வார்கள். அவர்கள் நாவினால் கர்த்தரைப் பாடுவார்கள். அவர்கள் இருதயமோ கர்த்தரைவிட்டு தூரமாயிருக்கும். அவர்கள் உண்மையாய் ஆண்டவரை நேசிக்காததால், வேதத்தை படிக்க மாட்டார்கள். அதனால், வார்த்தையின்படி நடக்க மாட்டார்கள். நாள், நேரம், வாஸ்து பார்த்துக்கொண்டு, பாரம்பரியமாய், சடங்காச்சாரமாய் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்க முடியாது.

**கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்; உம்முடைய கிரியைகளையெல்லாம் தியானித்து, உம்முடைய செயல்களை யோசிப்பேன் என்றேன்** *(சங்கீதம் 77:11,12)*. கர்த்தருடைய நாமத்தின் வல்லமையையும், அற்புத செயல்களையும் எண்ணி, கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் செய்த காரியங்களையும் நினைத்துப் பார்த்து கர்த்தருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

**பூர்வ நாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாம் தியானிக்கிறேன்; உமது கரத்தின் கிரியைகளை யோசிக்கிறேன்** *(சங்கீதம் 143:5)*. பூர்வ நாட்களில் இஸ்ரவேல் ஜனங்களுக்கு செங்கடலை இரண்டாக பிளந்து வழியை உண்டாக்கி தம்முடைய வல்லமையை விளங்கச் செய்த தேவன், நம்முடைய வாழ்க்கையிலும் அற்புதம் செய்து அடைபட்டிருக்கிற வழியைத் திறக்க வல்லவராயிருக்கிறார் என்கிற விசுவாசம், வார்த்தையை தியானிக்கும் போது நமக்குள் வரும்.

**பவுலையும், சீலாவையும் அநேக அடிகள் அடித்து அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்து சிறைச்சாலையில் வைத்தார்கள். நடு ராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்து பாடினார்கள்; காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்** *(அப்போஸ்தலர் 16:25)*. பவுலும், சீலாவும் வேதனையின் மத்தியிலும், நடு ராத்திரியிலே ஜெபித்துக்கொண்டும், தேவனைத் துதித்து பாடிக்கொண்டும் இருந்தார்கள். அதனால் கட்டுகள் கழன்றது. சிறைச்



சாலைக் கதவுகள் தானாய் திறந்தது. இதனால், சிறைச்சாலை அதிகாரியும், அவன் குடும்பத்தாரும் இரட்சிக்கப் பட்டார்கள்.

நம் வாழ்க்கையிலும் எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், நாம் சோர்ந்து போகாமல் தேவனை ஸ்தோத்தரிக்கிறவர்களாக, துதிக்கிறவர்களாக, ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்மையும், நம் சூழ்நிலையையும்குறித்து சிந்தித்தால் பயமும், அவிசுவாசமும், கலக்கமும்தான் வரும். கர்த்தருடைய வார்த்தையைத் தியானித்தால், கலக்கம், பயம், அவிசுவாசம், சோர்வு நம்மைவிட்டுப் போகும். கர்த்தரைக்குறித்த விசுவாசம் வரும்.

பாடுகள், துக்கங்கள், சோர்வுகள், போராட்டங்கள் வரும்போது, சோர்ந்து போகாமல், பாடுகளை சகித்த இயேசு கிறிஸ்துவை நினைத்துப் பார்க்க வேண்டும்( எபிரெயர் 12:3). மனிதர்கள் அவருக்கு எதிராகச் செயல்பட்டபோது அவர் அதை பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். இயேசுவைப்போல நாமும் பொறுமையோடு இருக்கக் கற்றுக் கொள்வோம். வாழ்க்கையில் பிரச்சனைகளை, பணப் பற்றாக் குறையை சந்திக்கும்போதும், நம்பிக் கையை இழக்கச் செய்யும் மனிதர்களின் வார்த்தைகளை நாம் கேட்கும்போதும், நாம் நம்பிக்கையை இழந்து போகக் கூடாது. நாம் தனியாக இல்லை, நம்மோடுகூட நமக்கு உதவி செய்ய கர்த்தர் இருக்கிறார்.

கர்த்தருடைய வார்த்தையை இரவும் பகலும் தியானிப்போம். ஏனென்றால், கர்த்தருடைய வார்த்தை **ஆவியாயும், ஜீவனுமாய் உள்ள வார்த்தை** (யோவான் 6:63). மரித்தவர்களையும் உயிரோடு எழுப்புகிற வல்லமையுள்ள வார்த்தை. வார்த்தை காட்டுகிற மேன்மையான வழிகளில் நடப்போம். கர்த்தருடைய கிருபை உங்களோடிருப்பதாக!

---

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

ICICI **வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா






எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது; ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப் போட்டோம்.

எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம். பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்து போகிறோம்.

உமது கோபத்தின் வல்லமையையும், உமக்குப் பயப்படத்தக்க விதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்து கொள்ளுகிறவன் யார்?

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

- சங்கீதம் 90:9-12

இந்த பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் ‘ வாழ்க்கை’ என்ற ஒன்று இருக்கின்றது. மனிதனாய் பிறந்த எவனும் அந்த வாழ்க்கையை வாழ வேண்டும். அதை எப்படி வாழ்கிறோம் என்பதே காரியம். நாம் ஏதோ ஒன்றை சாப்பிடு வதில்லை. குறிப்பாக, இன்ன சாப்பாடு, இன்ன ருசி என்று நிர்ணயித்து சாப்பிடு கிறோம். அதேபோலத்தான் உடையும். அதேபோலத்தான் வாழ்கின்ற வீடும். இது, நமது விருப்பு, ரசனை, ருசி, தேவை, சூழ்நிலைகளை வைத்து வருகின்றது. அப்படிப்போல, நாம் வாழும் வாழ்க்கை யையும் தீர்மானிக்க நினைக்கிறோம். இன்ன படிப்பு படித்தால், இப்படிப் பட்ட வேலைக்கு செல்லலாம் என்பதை முதலாவது தீர்மானிக் கிறோம். நாம் அறியாத சிறு வயதில், பெற்றோர், நம்முடையக் காரியங் களை தீர்மானிக்கிறார்கள். நாம் வளர்ந்து, நன்கு யோசிக் கக்கூடிய, சுயமாகத் தீர்மானிக்கக்கூடிய பக்குவத்திற்கு வரும்போது, நாமே முடிவெடுக்கி றோம். ஆனால், ஒரு கால கட்டத்திற்குப் பின்னர், நாம் நினைப் பதையெல்லாம் நிறைவேற்ற முடிவதில்லை. நமக்கு அப்பாற்பட்டு காரியங்கள் இருப்பதைக் காண்

கிறோம். நாம் செய்யும் காரியங்கள் கைகூடி வருவதில்லை. சில காரியங்கள், நமக்கு எட்டாமல் போய்விடுகின்றன. சில சமயங்களில், சூழ்நிலைகள் எதிராக இருக்கின்றன. சில சமயங்களில், சக மனிதர்கள் நமக்கு எதிராகவோ, சாதகமாகவோ இல்லாமல் இருக்கிறார்கள். நமக்குள் பயம், கலக்கம், குழப்பம், நிச்சயமற்ற தன்மை, சந்தேகம் வருகின்றது. இதனால், நாம் உறுதியை இழக்கின்றோம். அடுத்து என்ன செய்வது என்பதைத் தீர்மானிக்கத் தடுமாறுகிறோம். நாம் திட்டமிடும் காரியம் நடந்தேறுமா என்று சந்தேகம், நமக்கு நிச்சயமில்லை. அதினால், உறுதியாக எதையும் நம்மால் தீர்மானிக்கவோ, திட்டமிடவோ முடியவில்லை. அப்பொழுது, அந்த சமயத்தில், நாம் அதிகமாக யோசிக்க ஆரம்பிக் கிறோம். ஒரு காரியத்தை பல கோணங்களில் பார்க்க முற்படு கிறோம். இப்படி செய்தால் அது எப்படிபோய் முடியும்? அப்படி செய் தால் அது எப்படிபோய் முடியும்? என்று நமக்கு நாமே கேள்விகளை எழுப்பி, அதற்கானப் பதில்களைப் பெற பிரயாசப்படுகிறோம்.

இவ்வளவும் எதற்காக? நாம் வாழும் வாழ்க்கையில் ஏமாற்றத்தை, கசப்பை, துக்கத்தை, சோர்வை, அலுப்பை தவிர்த்து, திருப்தியை, சமாதானத்தை, சந்தோஷத்தைப் பெறவே.

ஒரு விளையாட்டு வீரன், முதலாவது, சரியாக விளையாட வேண்டுமென்பதில் கவனமாக இருப்பான். சரியாக விளையாடிய பின்னர், சிறப்பாக விளையாட முனைந்து செயல்பட ஆரம்பிப்பான். அதேபோல, ஒரு இசைக் கலைஞன், முதலாவது, சரியாக தன் இசைக் கருவியை இசைக்க வேண்டுமென்பதில் கவனம் செலுத்துவான். அதன்பின்னர், சிறப்பாக இசைக் கருவியை இசைக்க முற்படுவான். அப்படிப்போல, நாமும் முதலாவது, நமது வாழ்க்கையை சரியாக வாழ கவனம் செலுத்த வேண்டும். அப்படி சரியாக வாழ, நாம் எப்படி வாழ வேண்டுமென்பதையும், நமது வாழ்க் கையைப்பற்றியும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இதை மனிதர்கள் சொல்லும் வார்த்தைகளையோ அல்லது மனிதர்கள் எழுதியுள்ளவற்றைப் படித்தோ தெரிந்துகொள்ள முயலாமல், கர்த்தர் எழுதியுள்ள வேத புத்தகத்தைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், பரிசுத்த வேதாகமமே பரிபூரணமுள்ளது. குறைவுகள் இல்லாதது. கர்த்தர், அவருடைய பரம ஞானத்தினால் எழுதினது. மிகச்சரியானதாகும். மற்றொரு காரியம், நம்முடைய எல்லா கேள்விகளுக்கும் வேதத்தில் மாத்திரமே பதில் உண்டு. நமக்கு குழப்பத்தை ஏற்படுத்தாது; தெளிவைத் தரும். பயத்தைத் தராது; உறுதியைத் தரும். வாழ்க்கை என்றால் என்ன? நாம் யார்? நம்மைச்சுற்றியிருப்பவை என்ன? எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொன்றின் நோக்கம் என்ன? என்பவற்றுக்கெல்லாம் நமக்கு வேதத்திலிருந்து பதில் கிடைக்கும். **கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும். இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்; என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாதது போலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். (சேலா) வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாகவே சஞ்சலப்படுகிறான்; ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்** *(சங்கீதம் 39:4-6)*.

வேதத்திலுள்ள எல்லாக் காரியங்களையும், பரிசுத்த ஆவியானவர் சொல்லிக் கொடுப்பார். நம்மால், மனித அறிவினால், ஞானத்தினால், அனுபவத்தினால் அறிந்துகொள்ள முடியாத, கிரகிக்க முடியாதக் காரியங்களையெல்லாம், பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கற்றுக் கொடுப்பார்.

அப்பொழுது, நாம் யார், எவ்வளவு காலம் இந்த பூமியில் வாழ்வோம் என்பதும், அதைவிட மேலானக் காரியம், எப்படிப்பட்ட வாழ்க்கையை நாம் வாழ வேண்டும் என்ற தீர்மானமும் நமக்கு வரும். இப்படிப்பட்டத் தெளிவு உண்டானபின்னர் வாழும் வாழ்க் கையே சிறப்பான வாழ்க்கையாகும். அப்படி வாழும்போதே நமக்கு வாழ்க்கை திருப்தியாக இருக்கும். எதையோ ஒன்றை இழந்ததுபோன்ற மனப்பான்மை நமக்கு இருக்காது. மற்ற சக மனிதர்களுடைய வாழ்க்கையைப் பார்த்து ஒப்பிட மாட்டோம், பொறாமைகொள்ள மாட்டோம், தாழ்வு மனப்பான்மை வராது.

எதையோ ஒன்றைப் பெற பிரயாசப்பட மாட்டோம். எதையோ ஒன்றை சாதிக்க போராடமாட்டோம். எது நிரந்தரம், எது தற்காலிகம் என்பது நமக்கு பிரத்தியட்சமாகத் தெரியும். எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற தெளிவு நமக்கு இருக்கும்.

ஒன்றை இழந்தாலும், அது நம்மை வெகுவாகப் பாதிக்காது. ஒன்றைப் பெறும்போதும் அளவுகடந்து சந்தோஷப் பட மாட்டோம். சோர்வு, தோல்வி, ஏமாற்றம் வந்தாலும் அவை நீண்ட காலம் நம்மை பாதிக்காது. சீக்கிரத்திலே அவற்றிலிருந்து வெளியே வருவோம். செயற்கையாக இருக்க மாட்டோம். இயற்கையாக இருப்போம். நமக்குள் ஒரு வெளிச்சம் இருக்கும். இருள் இருக்காது. சராசரி வாழ்க்கைக்கும், சிறப்பான வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் நமக்குத் தெரியும்.

பேர், பணம், பொருள் சம்பாதிப்பதில் நோக்கமாக இருக்க மாட்டோம். நம்மிடம் இருப்பதை இன்று அனுபவிக்காமல் நாளைக்காக சேமித்துவைக்க மாட்டோம். நம்மிடம் இருப்பவை மாத்திரமல்ல, நாமும் நிரந்தரமானவர்களல்ல என்பதில் நாம் தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருப்போம்.

கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள வாழ்க்கையை பூரணமாக வாழ்ந்துவிட்டு செல்வோம். நம் கரத்தில் எதுவும் இல்லை, எல்லாம் கர்த்தருடைய கரத்தில் இருக்கின்றது. எல்லாவற்றையும் நடப்பிப்பது அவரே. **என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது** *(சங்கீதம் 31:15)*. **சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது** *(யோபு 12:10)*. எனவே, சூழ்நிலைகள், மனிதர்களைப்பற்றி கர்த்தரிடமே கேட்டு அறிந்து செயல்பட ஆரம்பிப்போம்.

வேதத்தின் வார்த்தை நமக்கு விளக்கு போன்று, வெளிச்சத்தைத் தந்து, வழியைக் காட்டும். நம்முடைய

முடிவு நமக்குத் தெரிவதால், அவசரமோ, வேகமோ நம்மிடத்தில் இருக்காது. நிதானமாக, பொறுமை யாக இருப்போம். மற்ற மனிதர்கள் பல ஆலோசனைகளைச் சொன்னாலும், வேதத்தின் வார்த்தையின் வெளிச்சத்திலே அவற்றை நிறுத்துப் பார்த்து, நிதானிப்போம். எல்லாவற்றுக்கும் கர்த்தரையே நோக்கிப் பார்ப்போம்.

என் வாழ்க்கை குறுகினது, புகையைப்போல, பனியைப்போல, நிழலைப்போல சீக்கிரமாகக் கடந்து போய்விடும் என்ற எண்ணம், ஸ்திரமாய் நம்மிடத்தில் காணப்படும். அதுவே வாழ்க்கையின் அஸ்திபாரமாய் இருக்கும். **நாம் நேற்று உண்டானவர்கள், ஒன்றும் அறியோம்; பூமியின்மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது (யோபு 8:9). மனுஷன் மாயைக்கு ஒப்பாயிருக்கிறான்; அவன் நாட்கள் கடந்துபோகிற நிழலுக்குச் சமானம்** *(சங்கீதம் 144:4)*.

இது எதிர்மறையான எண்ணமோ, அவிசுவாசமோ அல்ல. இதுதான் சத்தியம். மோசே, தாவீது, யோபுவைக் கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் எழுதினது.

இந்த அறிவு அதாவது என் வாழ்க்கை இதுதான், என் முடிவு இதுதான் என்ற அறிவு இருப்பதால், அதற்கேற்றாற்போல் வாழ்வோம். வேறொரு வாழ்க்கையைத் தேடி அலையமாட்டோம். நம்மை நடத்துவது கர்த்தரே என்பதை அறிந்து கொண்டதால், அவரை முற்றிலுமாகச் சார்ந்து கொள்வோம்.

இயேசு கிறிஸ்துவும் நாமும் படகில் இருக்கிறோம். துடுப்பு அவர் கையில் இருக்கிறது. அவரே நம்மை நடத்திச் செல்வார். நமக்கு எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தால் திருப்தியாக, சமாதானமாக, சந்தோஷமாக இருக்கும் என்பதை நம்மைவிட, நம்மை உண்டாக்கின அவருக்கே தெரியும். ஆமென்!

இன்று அநேகர் எதையோ ஒன்றை சாதிக்க வாஞ்சிக்கிறார்கள். ஜனங்கள் மத்தியில் புகழ்பெற்று விளங்க வேண்டுமென்று விருப்பப்படுகிறார்கள். இது எப்படி நிகழ்கின்றதென்றால், இன்று அதாவது நிகழ்காலத்தில் பேர், புகழ் பெற்று இருப்பவர்களை சமுதாயம் எப்படி பார்க்கின்றது என்பதைக் கவனிப்பதினாலேயே. நாமும் அவரைப்போல, இவரைப்போல உருவாக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சுற்றியுள்ள மனிதர்கள், ஊடகம், இணைய தளம் இவையெல்லாம் மற்றொரு புறம் இவர்களுடையக் கருத்தை, எண்ணத்தை இன்னுமாக பலப்படுத்துகிறது. இந்த எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்து ஆழ்மனதில் பதிந்துவிடுகின்றது. அது நிறைவேறவேண்டுமே என்ற ஏக்கம், தாகம் உண்டாகிறது. அதினால் தவிப்பு உண்டாகிறது. ஒரு சாதனையாளனை நமக்கு முன்மாதிரியாக வைப்பது தவறல்ல. அதற்கு முன்பாக நம்முடைய துறை என்ன என்பதை நாம் முதலாவது தெரிந்து கொள்ளவேண்டும். நமது விருப்பம், வாஞ்சை, ஆசை, சுவாரஸ்யம், பலம், ஈடுபாடு எந்தத்துறையில் உள்ளது என்பதை கவனித்துப் பார்த்து அதில் நுழைந்து, முன்னேற பிரயாசப்பட வேண்டும். சரி, இதுதான் என்னுடைய துறை என்பதை அறிந்து கொண்டோமென்று வைத்துக்கொள்வோம். இப்போது அந்த குறிப்பிட்டத் துறையில் உள்ள ஒருவரை நான் எனக்கு முன்மாதிரியாக வைத்துக் கொள்ளலாமா? என்று நீங்கள் கேட்கலாம். இப்போது



தான் நான் சொல்ல வேண்டிய கருத்திற்கு வருகிறேன். இப்போது நாம் கவனித்துப் பார்க்கவேண்டிய காரியம், அந்த மனிதருக்கு முன்னால் யார் இப்படிப்பட்ட சாதனை செய்துள்ளார்கள் என்பதையும், அவருடைய முடிவையும் பார்க்க வேண்டும். இதுதான் மிக முக்கியமானக் காரியம். இப்போது சாதனை படைத்து பிரபலமாக உள்ளவரின் முடிவும் இதுதான். நாளை நமது முடிவும் இதுதான். இந்த அறிவு, புத்தி நமக்கு மிக மிக அவசியம். நாம் எப்படி ஆரம்பிக்கப்போகிறோம் என்பது முக்கியமல்ல, எப்படி முடிக்கப்போகிறோம் என்பதே முக்கியம். இது எதிர்மறையான எண்ணமென்றோ அல்லது நம்மை சோர்வில் ஆழ்த்தும் காரியம் என்றோ நீங்கள் நினைக்கலாம். அப்படி அல்ல. இதுதான் உண்மை. இதுதான் நடக்கும். எந்த மனிதனும் நிரந்தரமாய் இந்த பூமியில் இருக்கப்போவ தில்லை. அப்படியென்றால், எதையுமே சாதிக்க வேண்டாமா?வெறுமனே, சும்மா இருந்துவிடலாமா? என்று நீங்கள் கேட்கலாம். இந்த முடிவைப் பற்றி தெரிந்துகொள்வது எதற்காக என்றால், நமக்குள் இருக்கின்ற தவிப்பு அடங்கவே. நமக்குள் நிதானம், பொறுமை வரவே. வீணான தவிப்பு, பரபரப்பு, அவசரம் நம்மைவிட்டு வெளியேறவே. சூழ்நிலையை மற்றும் மனிதர்களைப் பார்த்து நாம் பொறாமைப்படாமல், சோர்வுறாமல் இருக்கவே. உறுதியோடு இருப்போம். சூழ்நிலையையும், மனிதர்களையும் அறிந்து, புரிந்து, நாம் எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்படுவோம். இயேசுவே நமக்கு தலையாக இருப்பார். ஏனென்றால், இந்த தெளிந்த புத்தி நமக்கு வந்தது வேதத்தின் வார்த்தை மூலமே. அவருடைய வார்த்தை நம்மை வழிநடத்தும்.

இந்த பூமிக்குரிய வாழ்க்கைக்குப் பிறகு பரலோக வாழ்க்கை நமக்குள்ளது என்பதை நாம் அறிவோம். இந்த பூமியில் நாம் வாழும் வாழ்க்கை இங்கே முடிவதில்லை. பின்னர் எதற்காக நாம் இந்த பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்? தற்போது நம்மை சுற்றி நடக்கும் காரியங்கள், நமக்கு எதிராக செயல்படும் மனிதர்கள், நம்மை மேற்கொள்ளாதபடி, நாம் உறுதியாகவும், சமாதானமாகவும் இருக்கவே. மேலும், தற்போதுள்ள வாழ்க்கை திருப்தியாக இருக்கவுமே. நமது துறையில் நாம் சாதனை செய்தாலும், பெருமையோ, மனமேட்டிமையோ கொள்ளாமல் தாழ்மையாக இருப்போம். ஏனென்றால் எதுவும் நம் கரத்தில் இல்லை. நாம் கர்த்தருடைய கரத்தில் ஒரு உபகரணமே. அவர்தான் செய்தார். அதை நம்மைக்கொண்டு செய்திருக்கிறார். அவர், யாரைக் கொண்டும் செய்ய முடியும். நம்மை கிருபையாய் தெரிந்தெடுத்திருக்கிறார், அவ்வளவே. அந்த சாதனையை செய்வதற்கான தாலந்து, ஆர்வம், ஆற்றல், சூழ்நிலை எல்லாம் நமக்குக் கொடுத்து நம்மை உருவாக்கி பயன்படுத்தியிருக்கிறார். அது நமக்கு கிடைத்த சிலாக்கியம். நம்மை அவர் அடிமையைப்போல நடத்தவில்லை. நமக்கு முழு சுதந்திரம் கொடுத்தார். நாமாகத்தான் ஒவ்வொரு வினாடியும் செயல்பட்டோம். அதற்கு சாட்சி, நாம் பட்ட கஷ்டங்கள், நாம் சந்தித்த போராட்டங்கள் ஆகும். அவரே எல்லாவற்றையும் செய்தால், கஷ்டமோ, போராட்டமோ நாம் சந்திக்கத் தேவையில்லையே.

- **தொடரும்**